**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.26/2019**

**Deposition of Witness for Prosecution PW 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலகுரு | Father's Name | : | அய்யாவு (எ) செல்வம் |
| Village | : | வலங்கைமான் | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | | Age | : | 32 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 05th day of March 2026.**

**(A1, A2, A4, A6, A7 are present. A5 died. A3 Split-up in SC 147/2025).**

**முதல் விசாரணை**

நான் தற்போது வலங்கைமானில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். தினேஷ் என்பவர் இறந்து விட்டதாக எனக்கு கைபேசி மூலம் தகவல் வந்தது. கூட்டமாக வந்த நபர்கள் தினேஷை வெட்டி விட்டதாக சொன்னார்கள். தினேஷ் இறப்பு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.05 15:04:18 +0530

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் அய்யாவு என்பவர் வலங்கைமான் கள்ளர் தெரு பாபநாசம் ரோடு சந்திப்பில் அலுவலகம் வைத்து உள்ளூர் மற்றும் வெளியூர்காரர்களுக்கு ஏற்படும் பிரச்சனை சம்மந்தமாக பஞ்சாயத்து செய்து வந்தார் எனவும் என் அப்பா இறந்து விட்டார் எனவும் என் அப்பா இறந்தவுடன் அந்த ஆபீஸை யார் நிர்வாகம் செய்வது என்பது பற்றி எனக்கும் என் பெரியப்பா மகன் ஜெயராஜுக்கும் வாய் தகராறும் முன் விரோதமும் இருந்து வருகிறது எனவும் நான் என் நண்பர்களுடன் ஒரு கோஷ்டியாகவும் ஜெயராஜ் அவரது நண்பர்களுடன் ஒரு கோஷ்டியாகவும் இருந்து வந்தோம் எனவும் கடந்த 22.08.2015 ம் தேதி இரவு 7.45 மணியளவில் நான், குமாரவேல், சின்னப்பா ஆகிய மூவரும் என் அப்பா அய்யாவின் ஆபீஸ் அருகே பாபநாசம் ரோட்டில் நின்று பேசிக் கொண்டிருந்தபோது ஜெயராஜும் அவரது கோஷ்டியை சேர்ந்த கார்த்திக், ராஜசேகர், ஜெய்வீர், அரவிந்த், அருண்குமார் உட்பட 7 பேர் ஆபிஸ் பக்கம் வந்தார்கள் எனவும் ஜெயராஜ் என்னிடம் வந்து ஆபீஸ் வாசலில் நின்று கொண்டிருந்த காரை ஏன்

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.05 15:04:24 +0530

தள்ளிப்போட சொன்னாய் உன் அப்பா வீட்டு இடமா என கேட்டதில் எங்களுக்குள் வாய் தகராறு ஏற்பட்டது எனவும் அப்போது தினேஷ் நீங்கள் இருவரும் அண்ணன், தம்பிகள் பிரச்சனை வேண்டாம் என சமாதானம் செய்தார் எனவும் அப்போது கார்த்திக் தன் முதுகு பக்கம் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து நீ என்னடா படையாச்சி புண்ட மவனே எங்களை சமாதானம் செய்வது என சொல்லி வெட்டுவதற்கு ஓங்கியபோது தினேஷ் தப்பித்து மதிப்பு தெருவில் கிழக்கு பக்கமாக ஓடினார் எனவும் வீரப்ப முதலியார் மாட்டுக் கொட்டகை அருகில் ஜெயராஜின் நண்பர்கள் அரவிந்த், முத்தையன், அருண்குமார், ஜெய்வீர் ஆகியோர் தினேஷை மறைத்து பிடித்துக் கொண்டார்கள் எனவும் கார்த்தி தன் கையில் வைத்திருந்த அருவாளால் இதோடு தொலைந்துபோடா என சொல்லி தினேஷின் பின்பக்க மண்டையிலும் வலது முன் கையிலும் முழங்கையிலும் வெட்டினான் எனவும் அங்கு வந்த ராஜசேகர் அதே அருவாளை பிடுங்கி தினேஷின் வலது கை முண்டா, வலது கால் முட்டி, வலது பக்க வயிறு, இடது கால் ஆகிய இடங்களில் வெட்டினார் எனவும் தினேஷ் இரத்த வெள்ளத்தில் கீழே விழவும் சம்பவத்தில் ஈடுபட்ட கார்த்தி, ராஜசேகர், அருண்குமார், அரவிந்த், ஜெயராஜ், ஜெய்வீர், முத்தையன் ஆகிய 7 பேரும் மேற்கு பக்கம் ஓடிவிட்டார்கள் எனவும் போலீசார் விசாரணையில்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.05 15:04:28 +0530

சொல்லியுள்ளேன் என்றால் தவறு. ஆஜர் எதிரிகள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரிகளை காப்பாற்றுவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வலங்கைமான் மதிப்பு தெருவில் வீரப்ப முதலியார் வீட்டின் மாட்டு கொட்டகை அருகில் இதே வழக்கு சம்பவ நாள், நேரத்தில் நானும் இவ்வழக்கில் இறந்த தினேசும் சாட்சி அருண் என்பவரும் நெடுமாறன் மற்றும் பிரகாஷ் ஆகியோர் 6 வது எதிரி ஜெயராஜ், 7 வது எதிரி முத்தையன் ஆகியோர்களை தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தி கொலை முயற்சி செய்ததாக வலங்கைமான் போலீசார் கு.எண் 298/2015 என்ற நம்பரில் எங்கள் மீது இதே நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நடந்தது என்றால் சரிதான்.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.05 15:04:34 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.26/2019**

**Deposition of Witness for Prosecution PW 7**

| | | | |
|---|---|---|---|
| Name | : அருண் | Father's Name | : மருதமுத்து |
| Village | : வலங்கைமான் | Taluk | : வலங்கைமான் |
| Calling | : | Age | : 39 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 05th day of March 2026.**

**(A1, A2, A4, A6, A7 are present. A5 died. A3 Split-up in SC 147/2025).**

**முதல் விசாரணை**

நான் தற்போது வலங்கைமானில் வசித்து வருகிறேன். நான் உடல்நிலை சரியில்லாமல் வீட்டில் உள்ளேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இவ்வழக்கில் இறந்த தினேஷ் இறப்பு சம்மந்தமாக கைபேசி மூலம் தெரிந்து கொண்டேன். சம்பவத்தன்று நான் ஊரில் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.05 15:04:40 +0530

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் என் நண்பன் பாலகுருவின் அப்பா அய்யாவு என்பவர் வலங்கைமான் கள்ளர் தெரு பாபநாசம் ரோடு சந்திப்பில் அலுவலகம் வைத்து உள்ளூர் மற்றும் வெளியூர்காரர்களுக்கு ஏற்படும் பிரச்சனை சம்மந்தமாக பஞ்சாயத்து செய்து வந்தார் எனவும் அய்யாவு இறந்து விட்டார் எனவும் அய்யாவு இறந்தவுடன் அந்த ஆபீசை யார் நிர்வாகம் செய்வது என்பது பற்றி பாலகுருவிற்கும் அவரது பெரியப்பா மகன் ஜெயராஜுக்கும் வாய் தகராறும் முன் விரோதமும் இருந்து வருகிறது எனவும் பாலகுரு அவரது நண்பர்களுடன் ஒரு கோஷ்டியாகவும் ஜெயராஜ் அவரது நண்பர்களுடன் ஒரு கோஷ்டியாகவும் இருந்து வந்தார்கள் எனவும் கடந்த 22.08.2015 ம் தேதி இரவு 7.45 மணியளவில் பாலகுரு, குமாரவேல், சின்னப்பா ஆகிய மூவரும் அய்யாவின் ஆபீஸ் அருகே பாபநாசம் ரோட்டில் நின்று பேசிக் கொண்டிருந்தபோது ஜெயராஜும் அவரது கோஷ்டியை சேர்ந்த கார்த்திக், ராஜசேகர், ஜெய்வீர், அரவிந்த், அருண்குமார் உட்பட 7 பேர் ஆபிஸ் பக்கம் வந்தார்கள் எனவும் ஜெயராஜ் பாலகுருவிடம் வந்து ஆபீஸ் வாசலில் நின்று கொண்டிருந்த காரை ஏன் தள்ளிப்போட சொன்னாய் உன் அப்பா வீட்டு இடமா என கேட்டதில் அவர்களுக்குள் வாய் தகராறு ஏற்பட்டது எனவும் அப்போது தினேஷ் நீங்கள்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.05 15:04:46 +0530

இருவரும் அண்ணன், தம்பிகள் பிரச்சனை வேண்டாம் என சமாதானம் செய்தார் எனவும் அப்போது கார்த்திக் தன் முதுகு பக்கம் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து நீ என்னடா படையாச்சி புண்ட மவனே எங்களை சமாதானம் செய்வது என சொல்லி வெட்டுவதற்கு ஓங்கியபோது தினேஷ் தப்பித்து மதிப்பு தெருவில் கிழக்கு பக்கமாக ஓடினார் எனவும் வீரப்ப முதலியார் மாட்டுக் கொட்டகை அருகில் ஜெயராஜின் நண்பர்கள் அரவிந்த், முத்தையன், அருண்குமார், ஜெய்வீர் ஆகியோர் தினேஷை மறைத்து பிடித்துக் கொண்டார்கள் எனவும் கார்த்தி தன் கையில் வைத்திருந்த அருவாளால் இதோடு தொலைந்துபோடா என சொல்லி தினேஷின் பின்பக்க மண்டையிலும் வலது முன் கையிலும் முழங்கையிலும் வெட்டினான் எனவும் அங்கு வந்த ராஜசேகர் அதே அருவாளை பிடுங்கி தினேஷின் வலது கை முண்டா, வலது கால் முட்டி, வலது பக்க வயிறு, இடது கால் ஆகிய இடங்களில் வெட்டினார் எனவும் தினேஷ் இரத்த வெள்ளத்தில் கீழே விழவும் சம்பவத்தில் ஈடுபட்ட கார்த்தி, ராஜசேகர், அருண்குமார், அரவிந்த், ஜெயராஜ், ஜெய்வீர், முத்தையன் ஆகிய 7 பேரும் மேற்கு பக்கம் ஓடிவிட்டார்கள் எனவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. ஆஜர் எதிரிகள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரிகளை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.05 15:04:50 +0530

காப்பாற்றுவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வலங்கைமான் மதிப்பு தெருவில் வீரப்ப முதலியார் வீட்டின் மாட்டு கொட்டகை அருகில் இதே வழக்கு சம்பவ நாள், நேரத்தில் நானும் இவ்வழக்கில் இறந்த தினேசும் சாட்சி பாலகுரு என்பவரும் நெடுமாறன் மற்றும் பிரகாஷ் ஆகியோர் 6 வது எதிரி ஜெயராஜ், 7 வது எதிரி முத்தையன் ஆகியோர்களை தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தி கொலை முயற்சி செய்ததாக வலங்கைமான் போலீசார் கு.எண் 298/2015 என்ற நம்பரில் எங்கள் மீது இதே நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நடந்தது என்றால் சரிதான்.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.05 15:04:56 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.26/2019**

**Deposition of Witness for Prosecution PW 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அடைக்கலசாமி | Father's Name | : | குழந்தைசாமி |
| Village | : | வலங்கைமான் | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | | Age | : | 66 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 05th day of March 2026.**

**(A1, A2, A4, A6, A7 are present. A5 died. A3 Split-up in SC 147/2025).**

**முதல் விசாரணை**

நான் தற்போது வலங்கைமானில் வசித்து வருகிறேன். நான் கிராம உதவியாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். 22.08.2015 ம் தேதி இரவு 7.45 மணியளவில் நானும் மனோகரனும் வலங்கைமான் மதிப்பு தெருவில் தினேஷ் என்பவர் வெட்டப்பட்ட இடத்தை காவல் ஆய்வாளர் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் நான் 2 வது சாட்சியாகவும் முதல் சாட்சியாக மனோகரனும் கையெழுத்து போட்டோம். அந்த பார்வை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.05 15:05:02 +0530

மகஜர் **அ.சா.ஆ.2**. பின் சம்பவ இடத்திலிருந்து சிறிதளவு இரத்தம் தோய்ந்த மண், சிறிதளவு இரத்தம் தோயாத மண் ஆகியவற்றை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நான் 2 வது சாட்சியாகவும் முதல் சாட்சியாக மனோகரனும் கையெழுத்து போட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.3**. மேற்படி அயிட்டங்கள் முறையே **சா.பொ.2, சா.பொ.3**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ.2, அ.சா.ஆ.3 ஆவணங்களில் நான் வலங்கைமான் காவல் நிலையத்தில் வைத்து போலீசாரிடம் கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.05 15:05:07 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

## DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.26/2019

**Deposition of Witness for Prosecution PW 9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜேந்திரன் | Father's Name | : | சண்முகம் |
| Village | : | வலங்கைமான் | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | | Age | : | 61 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 05th day of March 2026.**

**(A1, A2, A4, A6, A7 are present. A5 died. A3 Split-up in SC 147/2025).**

**முதல் விசாரணை**

நான் தற்போது வலங்கைமானில் வசித்து வருகிறேன். நான் தேங்காய் பறிக்கும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் கார்த்தியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் சாட்சி கையெழுத்துக்கள் என்னுடையவை. மேற்படி கையெழுத்துக்கள் மட்டும் முறையே **அ.சா.ஆ.4, அ.சா.ஆ 5**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

SELVA MUTHU KUMARI    Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.05 15:05:14 +0530

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 23.08.2015 ம் தேதி மாலை 5.00 மணியளவில் நானும் செல்லதுரையும் சந்திரசேகரபுரம்-பூண்டி பேருந்து நிறுத்தம் அருகே நின்று கொண்டிருந்தபோது வலங்கைமான் ஆய்வாளர் கார்த்தி மற்றும் ராஜசேகர் ஆகியோரை கைது செய்தார்கள் எனவும் அதில் கார்த்தி ஆய்வாளரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததில் நான் முதல் சாட்சியாகவும் செல்லதுரை 2 வது சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம் எனவும் பின் மேற்படி கார்த்தி லாயம் மெயின் ரோடு கோல்டன் சிட்டியில் உள்ள அவரது வீட்டின் வாசல் முன்பு இரத்தக் கறை படிந்த வெள்ளை நிற நூல் கயிறு சுற்றப்பட்ட இரும்பு அருவாளை எடுத்து ஆய்வாளரிடம் ஆஜர் செய்ததை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார் எனவும் அந்த கைப்பற்றுதல் மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் செல்லதுரை 2 வது சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம் எனவும் சொன்னால் தவறு. எதிரிகள் வேண்டப்பட்டவர்கள் என்பதால் கையெழுத்து போட்ட பேப்பர்களில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.05 15:05:19 +0530

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள கையெழுத்துக்களை வலங்கைமான் காவல் நிலையத்தில் வைத்துதான் நான் போட்டேன் என்றால் ஆமாம்.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.05 15:05:23 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.26/2019**

**Deposition of Witness for Prosecution PW 10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செல்லதுரை | Father's Name | : | பக்கிரிசாமி |
| Village | : | வலங்கைமான் | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | | Age | : | 56 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 05th day of March 2026.**

**(A1, A2, A4, A6, A7 are present. A5 died. A3 Split-up in SC 147/2025).**

**முதல் விசாரணை**

நான் தற்போது வலங்கைமானில் வசித்து வருகிறேன். நான் டிரைவர் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் கார்த்தியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்துக்கள் என்னுடையவை. மேற்படி கையெழுத்துக்கள் மட்டும் முறையே **அ.சா.ஆ.6, அ.சா.ஆ 7**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.05 15:05:29 +0530

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 23.08.2015 ம் தேதி மாலை 5.00 மணியளவில் நானும் செல்லதுரையும் சந்திரசேகரபுரம்-பூண்டி பேருந்து நிறுத்தம் அருகே நின்று கொண்டிருந்தபோது வலங்கைமான் ஆய்வாளர் கார்த்தி மற்றும் ராஜசேகர் ஆகியோரை கைது செய்தார்கள் எனவும் அதில் கார்த்தி ஆய்வாளரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததில் நான் 2 வது சாட்சியாகவும் ராஜேந்திரன் முதல் சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம் எனவும் பின் மேற்படி கார்த்தி லாயம் மெயின் ரோடு கோல்டன் சிட்டியில் உள்ள அவரது வீட்டின் வாசல் முன்பு இரத்தக் கறை படிந்த வெள்ளை நிற நூல் கயிறு சுற்றப்பட்ட இரும்பு அருவாளை எடுத்து ஆய்வாளரிடம் ஆஜர் செய்ததை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார் எனவும் அந்த கைப்பற்றுதல் மகஜரில் நான் 2 வது சாட்சியாகவும் ராஜேந்திரன் முதல் சாட்சியாகவும் எனவும் சொன்னால் தவறு. எதிரிகள் வேண்டப்பட்டவர்கள் என்பதால் கையெழுத்து போட்ட பேப்பர்களில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.05 15:05:34 +0530

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள கையெழுத்துக்களை வலங்கைமான் காவல் நிலையத்தில் வைத்துதான் நான் போட்டேன் என்றால் ஆமாம்.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.05 15:05:39 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருவாரூர்.